RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 61 மார்ச்.10 2026 செவ்வாய்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# டெல்லியில் ரூ.33,500 கோடி மதிப்பில் திட்டங்கள் : பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

புதுடெல்லி : மார்ச்.10- டெல்லி யூனியன் பிரதேசத்தில் ரூ.33,500 கோடி மதிப்பிலான திட்டங்களை, பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார். சில திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

தலைநகர் டெல்லியில் சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை, ஊதா, இளஞ்சிவப்பு (பிங்க்), மெஜந்தா உள்ளிட்ட பெயர்களில் 10க்கும் மேற்பட்ட வழித் தடங்களில் மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இதில் பிங்க் மற்றும் மெஜந்தா வழித் தடங்கள் இணைக்கப்பட்டு நாட்டின் முதல் வட்ட மெட்ரோ பாதை (ரிங் மெட்ரோ) அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி பிங்க் வழித் தடத்தில் 12.3 கி.மீ. நீள மஜ்லிஸ் பார்க் - உஜ்பூர் பாபர்பூர் பாதை, மெஜந்தா வழித் தடத்தில் 9.9 கி.மீ. நீள தீபாளி சவுக் மஜ்லிஸ் பார்க் பாதையை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார். மேலும் 3 புதிய மெட்ரோ வழித் தடங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

டெல்லி சரோஜினி நகர், நேதாஜி நகர் உள்ளிட்ட பகுதிகளில் அரசு ஊழியர்களுக்காக ரூ.15,200 கோடி மதிப்பில் 9,350 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இந்த வீடுகளின் சாவிகளை பயனாளிகளிடம் பிரதமர் மோடி வழங்கினார். ஒட்டுமொத்தமாக ரூ.33,500 கோடி மதிப்பிலான திட்டங்களை அவர் தொடங்கி வைத்தார், சில திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

டெல்லி விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: இந்திய பெண்கள் அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசியல், ஆட்சி நிர்வாகம், அறிவியல், விளையாட்டு, சமூக சேவை என அனைத்து துறைகளிலும் இந்தியப் பெண்கள் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகின்றனர். டெல்லியை சர்வதேச நகரமாக உருவாக்க வேண்டும். இதற்காக டெல்லியின் உள்கட்டமைப்புகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன.





இதன் ஒரு பகுதியாக டெல்லி மெட்ரோ சேவை, 375 கி.மீ. ஆக விரிவுபடுத்தப் பட்டுள்ளது. தற்போது நாட்டின் முதல் ரிங் மெட்ரோ சேவை தொடங்கப்பட்டிருக்கிறது. டெல்லியில் நமோ பாரத் ரயில் சேவை தொடங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் டெல்லியில் 1,800 மின்சார பஸ்கள் அறிமுகம் செய்யப்பட்டன. டெல்லி சுற்றுவட்ட சாலையால் போக்குவரத்து நெரிசல் குறைந்துள்ளது. யமுனை நதியை தூய்மைப்படுத்தும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. இரட்டை இன்ஜின் அரசால் டெல்லியில் வளர்ச்சி திட்டப் பணிகள் விரைவு பெற்றுள்ளன.

மத்திய அரசின் பல்வேறு திட்டங்களால் நாடு முழுவதும் ஏழைகள், விவசாயிகள், தொழிலாளர்கள் பலன் அடைந்து வருகின்றனர். சுமார் 2 லட்சம் நடைபாதை வியாபாரிகளுக்கு கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 10 கோடி பெண்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் அமல் செய்யப்பட்டுள்ளன. நாடு முழுவதும் 3 கோடி லட்சாதிபதி பெண்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. புதிய இந்தியாவை உருவாக்கி வருகிறோம். நமது நாட்டை முன்னேற்ற பாதையில் அழைத்துச் செல்ல அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

மே.வங்கத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படும்: டெல்லி விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: மேற்கு வங்கத்தில் நடந்த பழங்குடியினர் மாநாட்டில் பங்கேற்க சென்ற குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை அம்மாநில அரசு அவமதித்து உள்ளது. இதன் மூலம் நாட்டின் அரசியலமைப்பு சட்டம் அவமதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஒவ்வொரு பெண்களும் அவமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு வங்கத்தில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆணவத்துடன் செயல்படுகின்றனர். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் அவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள். மேற்கு வங்கத்தில் நிச்சயமாக ஆட்சி மாற்றம் ஏற்படும். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.





## நடேசன் செட்டியார் நடுநிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு நூலகத்தில் உறுப்பினர் அடையாள அட்டை மற்றும் புத்தகங்கள் வழங்கும் விழா

சிவகங்கை, மார்ச்.10- சிவகங்கை மாவட்ட மைய நூலகம் மற்றும் நூலக நண்பர்கள் திட்டத்தின் சார்பாக நேற்று நடேசன் செட்டியார் நடுநிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு நூலகத்தில் புத்தகங்கள் எடுத்து படித்து பயன்படும் வண்ணம் உறுப்பினர் அடையாள அட்டை மற்றும் புத்தகங்கள் வழங்கும் விழா பள்ளியில் நடைபெற்றது இவ்விழாவில் பள்ளி தலைமை ஆசிரியர் பாண்டியராஜன் வரவேற்றார்.

மாவட்ட மைய தலைமை நூலகர் திரு.வெங்கட் வேல் பாண்டி தலைமை வகித்தார்.

வட்டார கல்வி அலுவலர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார் சிறப்பு விருந்தினர் மதுரை வானொலி நிகழ்ச்சி தயாரிப்பாளர் கார்த்திகை தீபன் மாணவ மாணவியர்களுக்கு நூலக ஆட்டையாள அட்டையையும் புத்தகங்களையும் வழங்கி சிறப்புரை ஆற்றிஅதை தொடர்ந்து கலை நன்மணி.அ. ஈஸ்வரன் எழுதிய பெற்றோர்கள் நம்மை சுமைதாங்கியாய் தாங்கி வளர்த்தெடுத்தவர்கள் நாம் பெரியவர்கள் ஆனதும் நமது பெற்றோர்களை சுமைதாங்கியாக நினைத்து கைவிட்டு விடக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தும் "தேவையில்லாமல் போன சுமை தாங்கிகள் !" என்ற நாடக நூலை வெளியிட மாணவ மாணவிகள் பெற்றுக் கொண்டனர்.

போட்டித் தேர்வு பயிற்சியாளர் மருது எஸ்.விஜயகுமார் வாழ்த்துரை வழங்கினார். நிறைவாக நூலகர் முத்துக்குமார் நன்றியுரை கூறினார்.

இந்நிகழ்வில் ஏராளமான பள்ளி மாணவ மாணவிகள் பெற்றோர்கள் ஆசிரிய பெருமக்கள் பெரியோர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது..

## கண்ணாரிருப்பு தொட்டிச்சி அம்மன் பரிவார தெய்வங்கள் குடமுழுக்கு விழா...

சிவகங்கை. மார்ச்.10 சிவகங்கை மாவட்டம் . சிவகங்கை வட்டம் . படமாத்துரை அடுத்துள்ள கண்ணாரிருப்பு கிராமத்தில் பர்மா தமிழ்ச் சங்கத்தின் தலைவர் இரு. ச. சந்திரசேகரன் இந்திராதேவி மற்றும் தொழிலதிபர் முனியாண்டி ஆகியோர் குடும்பத்தினரின் ஏற்பாட்டில் தொட்டிச்சி அம்மன். கருப்பணசாமி மற்றும் ராக்கச்சி அம்மன் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு குடமுழுக்கு விழா நடைபெற்றது...

தொடர்ந்து இரண்டு நாட்கள் யாகங்கள் மற்றும் சிறப்பு பூஜை புணஷ்காரங்கள் நடத்தப்பட்டு

தொட்டிச்சி அம்மன் கோவில் பிரகாரத்தில் அமைக்கப்பெற்ற செப்புக் கலசங்களுக்கு புனித நீர் தெளிக்கப்பட்டு குடமுழுக்கு விழா நடைபெற்றது...



இந்த நிகழ்ச்சியின் போது சென்னை தொழிலதிபர் அரசப்பன் உள்ளிட்ட கண்ணாரிருப்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

நிகழ்ச்சியினிடையே அறுசுவை சைவ உணவு அன்னதானமாக பரிமாறப்பட்டது..

கண்ணாரா ரிருப்பு ஊராட்சி மேனாள் தலைவர் ரவிச்சந்திரன்

ஊராட்சி முன்னாள் தலைவர் மு.ரவி மற்றும் கண்ணன் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்...

# மடப்புரம் அஜித்குமார் மீதான நகை திருட்டு புகார் முடித்து வைப்பு

மதுரை, மார்ச்.10- மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் மீதான நகை திருட்டு புகாரை நீதிமன்றம் முடித்து வைத்தது.


சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மடப்புரம் பத்ரகாளி அம்மன் கோயில் காவலாளியாக பணிபுரிந்த அஜித்குமார் மீது கடந்த ஆண்டு ஜூன் 27ம் தேதி நிகிதா என்பவர் நகை திருட்டு புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் காவலாளி அஜித்குமாரை அழைத்து வந்து தனிப்படை காவலர்கள் விசாரணை நடத்தினர். மேலும், காவலர்கள் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்தார்.இச்சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில், காவல் மரண வழக்கு பதிவு செய்த சிபிஐ, வழக்கில் சம்பந்தப்பட்ட தனிப்படை காவலர்களான கண்ணன், ராஜா, ஆனந்த், பிரபு,



சங்கர மணிகண்டன், ஒட்டுநர் ராமச்சந்திரன் ஆகியோரை கைது செய்தது.மேலும், சிபிஐ தாக்கல் செய்த கூடுதல் குற்றப் பத்திரிக்கையில் அஜித்குமார் கொலை சம்பவத்தன்று பணியில் இருந்த மானாமதுரை சரக டிஎஸ்பி சண்முக சுந்தரம் மற்றும் திருப்புவனம் காவல் நிலைய ஆய்வாளர் ரமேஷ் குமார் மற்றும் சார்பு ஆய்வாளர் சிவக்குமார், தலைமை காவலர் இளைய ராஜா ஆகிய 4 பேரின் பெயர்கள் சேர்க்கபட்டது. தொடர்ந்து, இந்த வழக்கில் நகை திருட்டு புகார் அளித்த நிகிதாவை விசாரிக்க சிபிஐ தரப்பில் மதுரை தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதன்படி, நீதிமன்றத்தில் ஆஜரான நிகிதாவிடம், நகை திருட்டு புகாரை சிபிஐ முடிக்க முடிவு செய்திருப்பது குறித்து கருத்து கேட்கப்பட்டது. அதற்கு நிகிதா ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. அது தொடர்பாக எழுத்து பூர்வமாக மனு தாக்கல் செய்ய நிகிதாவுக்கு உத்தரவிடப்பட்டது. இந்த வழக்கு மதுரை தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, நிகிதா நேரில் ஆஜராகி எழுத்து பூர்வ மனு தாக்கல் செய்தார்.

திருடு போனதாக கூறப்படும் நகைகளை கண்டுபிடிக்க முடியவில்லை, எனவே நகை திருட்டு வழக்கை முடித்து வைக்கிறோம் என சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், இதற்கு நிகிதா சம்மதம் தெரிவித்ததன் பேரில் நகை திருட்டு புகாரை நீதிமன்றம் முடித்து வைத்தது.





## காட்பாடியில் எம்ஜிஆருக்கு ரூ.3 கோடியில் கோயில்: கும்பாபிஷேக விழா நடத்திய முரட்டு பக்தர்

காட்பாடி, மார்ச்.10- முன்னாள் முதல்வர் மறைந்த எம்ஜிஆருக்கு காட்பாடியில் ரூ.3 கோடியில் கோவில் கட்டப்பட்டு நேற்று கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்த கரசமங்கலத்தில் மும்மத அடையாளங்களுடன் முன்னாள் முதல்வர் எம்ஜிஆருக்கு ரூ.3 கோடி செலவில் கோயில் கட்டப்பட்டுள்ளது.

ராமச்சந்திரா அறக்கட்டளையின் நிர்வாகி டி.ஆர்.முரளி சார்பில் கட்டப்பட்டுள்ள இக்கோயிலின் கோபுரங்கள் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மும்மதங்களை அடையாளப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், கோயிலுக்குள் ரூ.17 லட்சம் மதிப்பில் ஐம்பொன்னாலான எம்ஜிஆரின் முழு உருவச்சிலையும் நிறுவப்பட்டுள்ளது. இந்த கோயில் கும்பாபிஷேக விழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதையொட்டி, கடந்த இரண்டு நாட்களாக யாக சாலைகள் அமைத்து விக்னேஷ்வர பூஜை, வருண பகவான் பூஜை, வாஸ்து சாந்தி, கணபதி ஹோமம் உள்ளிட்ட ஹோமங்கள் நடைபெற்றன.

நேற்று அதிகாலை இரண்டாம் கால பூஜை நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் கோபுரத்துக்கும், எம்ஜிஆர் சிலைக்கும் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து, எம்ஜிஆர் சிலைக்குச் சிறப்பு பூஜைகளும் நடைபெற்றன. இதில், சென்னை முன்னாள் மேயர் சைதை துரைசாமி, தொழிலதிபர் சேகர் ரெட்டி, பொதுமக்கள் மற்றும் எம்ஜிஆர் ரசிகர்கள் பலர் பங்கேற்றனர்.





## தேனி மாவட்ட காவல் அலுவலகத்தில் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு சட்டம் - ஒழுங்கு தொடர்பான கலந்தாய்வு கூட்டம்

திண்டுக்கல் மார்ச்.10-

திண்டுக்கல் சரக காவல்துறை துணைத் தலைவர் Dr.V. சசிமோகன், தலைமையில் நடைபெற்றது. இக் கலந்தாய்வு கூட்டத்தில் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. B. சினேஹா பிரியா, மற்றும் தேனி மாவட்ட உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர்கள் கலந்து கொண்டு, வருகின்ற சட்டமன்றத் தேர்தலை அமைதியாகவும் சுதந்திரமாகவும் நடத்துவதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள், வாகன சோதனைகள், கண்காணிப்பு ஏற்பாடுகள் மற்றும் சட்டம் - ஒழுங்கை பேணுவதற்கான பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது.





## செங்குன்றத்தில் 1000 ஏழை எளியமக்களுக்கு அன்னதானம் நலத்திட்ட உதவி வழங்கல்

மாதவரம், மார்ச். 10-

மாதவரம் தொகுதி செங்குன்றம் ஆர்.ஆர்.சி. தெருவில் முன்னாள் நார வாரிகுப்பம் பேரூராட்சி தலைவர், முன்னாள் காங்கிரஸ் கமிட்டி மாவட்ட துணை தலைவர் மற்றும் செங்குன்றம் பளுதூக்கும் தொழிலாளர்கள் சங்க தலைவர். முன்னாள் லாரி உரிமையாளர் சங்க தலைவர் மறைந்த ஆர்.ஆர்.சக்கரபாணி பிறந்த நாள் விழாவை ஏழை எளியமக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநில செயலாளர் ஆர்.ஆர்.சாந்தகுமார் தலைமையில் நடந்தது. நிகழ்ச்சிக்கு முன்னாள் மாவட்ட தலைவர் ஆர்.எம். தாஸ் மற்றும் செங்குன்றம் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் வழக்கறிஞர் ஆர்.ஆர்.ராஜுவ்காந்தி, வழக்கறிஞர் பிரிவு மாநில பொது செயலாளர் வழக்கறிஞர் ஆர். மதுமதி ராஜுவ்காந்தி, செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி 6வது வார்டு காங்கிரஸ் கவுன்சிலர் நீலாவதிசாந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டு ஆர்.ஆர்.சக்கரபாணி திருஉருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர்கள் தூவி தீபாராதனை காண்பித்து மரியாதை செலுத்தினர். பின்னர் சுற்று வட்டாரத்தில் உள்ள சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏழை எளியமக்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் புத்தாடை போன்ற நலத் திட்ட உதவிகளை வழங்கினர். இதில் டாக்டர் வெங்கடேசன், மாத்தூர் தமிழரசன், வட்டார தலைவர்கள் நித்தியானந்தம், வேல்முருகன் மற்றும் தீன்அலி, நூர்தீன், நிஷாந்த், ஆனந்தன், சுரேஷ், கோபி, உமர், உதயா, பாஸ்கர், சரவணன் உள்ளிட்ட ஆர்.ஆர்.சி. குடும்பத்தினர்கள், நண்பர்கள், சமூக ஆர்வலர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.



## திருப்பூர் கிழக்கு மாவட்டம் மகளிர் அணி மகளிர் அணி தொண்டர் அணி சார்பாக மகளிர் தின விழா மகளிர் தின விழா

திருப்பூர், மார்ச்.10-

திருப்பூர் கிழக்கு மாவட்டம் மகளிர் அணி மகளிர் அணி தொண்டர் அணி சார்பாக மகளிர் தின விழா மகளிர் தின விழாவை முன்னிட்டு சிஎஸ்ஐ பெண்கள் மாணவி விடுதிகளில் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் அணி தலைவர் சரஸ்வதி ராஜேந்திரன் மாவட்ட மகளிர்தொண்டர் அணி அமைப்பாளர் சசிகலா தில்லை முத்து மாவட்ட மகளிர் மகளிர் அணி துணைத்தலைவர் அருக்காணி ராமசாமி ஆகியோர், அடுத்து மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணிதுணை ஒருங்கிணைப்பாளர் திருமதி ஆனந்தி அவர்கள் மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி நகர நகர மகளிர் அணி அமைப்பாளர் புனிதா சக்திவேல் நகரத் துணைச்செயலாளர் செலின்பிலோமினா நகரத்தொண்டர் அணி அமைப்பாளர் முத்துலட்சுமி மற்றும் கவுன்சிலர்கள் தேவி அபிராமி ராஜாத்தி மருத்துவர் அணி தலைவர் இந்திராணி நகர துணை அமைப்பாளர்கள் சந்திரா உமா..

## ஊத்துக்கோட்டை அருகே தொம்பரம்பேடு கிராமத்தில் வேல்டு டிரஸ்ட்டு மற்றும் கிராம பொதுமக்களின் சார்பில் உலக மகளிர் தின கொண்டாட்டம்

திருவள்ளூர். மார்ச்.10-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை அருகே தொம்பரம்பேடு கிராமத்தில் வேல்டு டிரஸ்ட்டு சமூக சேவை நிறுவணம் மற்றும் கிராம பொதுமக்களின் சார்பில் 08.03.2026 அன்று மாலை 4:00 மணியளவில்தொம்பரம்பேடு ஸ்ரீகாலபைரவர் கோயில் வளாகத்துக்குள்மிக விமர்சியாக நடைபெற்றது. இவ்விழாவிற்குகிராமத் தலைவர் பழனி தலைமை தாங்கினார் கிராம பெரியோர்கள் தயாளன், கோவர்தனன், கோதண்டன், ஜி.கே. பழனி, செல்வம்ஆசிரியர், தேவராஜ், ஆறுமுகம், சங்கர், டி.ஆர்.சுரேஷ், விமல், மற்றும் நவின் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளை மேலாளர் முன்னிலை வகித்தனர் சிறப்பு அழைப்பாளர்ளாக வேர்ல்டு டிரஸ்ட்டு சமூக சேவை நிறுவன இயக்குனர் பரசுராமன் சமூக ஆர்வலர் தேர்வாய் நாகராஜ் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர் இந்நிகழ்ச்சியில் மகளீர் குழுவின் சார்பில் அனைவருக்கும்சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது இவ்விழாவில் கலைநிகழ்ச்சி குருநாடகம் நடனம் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் மகளூர் குழு ஒருங்கினைப்பாளர்கள் கிராம சங்க தலைவர் ரோஜா துணைதலைவர் பானுமதி செயலாளர் விஜயா பொருளாலர் சுமதி கணக்காளர் கோமதி மற்றும் 16குழுக்களை சேர்ந்த 320 மகளீர் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்







■ திமுக கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திருச்சி சிறுகனூரில் கழக முதன்மைச் செயலாளர் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஏற்பாட்டில் நடைபெறவுள்ள "ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்" எனும் கழக மாநில மாநாட்டிற்கான இறுதிகட்டப் பணிகளை கழகத் துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோர் பார்வையிட்டனர். உடன் போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள் உடனிருந்தனர்.



## சென்னை ஜீவா இல்லம் மற்றும் மாமல்லபுரம் புதுப்பிக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு ஓய்வு இல்லம்அமைச்சர் சி.வெ.கணேசன் திறந்து வைத்தார்

பெரம்பலூர், மார்ச். 10-



சென்னை, தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள ஜீவா இல்லத்தில் புதுப்பிக்கப்பட்ட சென்னை ஜீவா இல்லம் மற்றும் மாமல்லபுரம் புதுப்பிக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு ஓய்வு இல்லம் ஆகியவற்றை தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் திறந்து வைத்தார். இவ்விழாவில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு செயலாளர் வீர ராகவ ராவ் இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் திரு. சி. ராமன் இ.ஆ.ப., தமிழ்நாடு தொழிலாளர் நலவாரிய செயலாளர் செந்தில்குமாரி, கூடுதல் தொழிலாளர் ஆணையர் சென்னை யாஸ்மின் பேகம் தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை செயலாளர் நடராஜன். மற்றும் துறை அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





## நீலகிரி மாவட்டம் குன்னூர் கிளை அரசு போக்குவரத்து கழக நடத்துநர் மாரத்தான் போட்டியில் முதல் இடம்

நீலகிரி, மார்ச்.10-

மகளிர் தினத்தை முன்னிட்டு திருப்பூர் மாவட்டம் திருமுருகன் பூண்டியில் உள்ள ஏவிபி பள்ளியில் நடைபெற்ற ரன் போர் லெட்ரசி மாரத்தான் போட்டியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் உதகை மண்டலம் குன்னூர் கிளையை சார்ந்த நடத்துனர் நி.ஆறுமுகம் வயது 55, 5 கிலோ மீட்டர் மாரத்தான் போட்டியில் கலந்துகொண்டு 22.31 நிமிடங்களில் ஓடி முதல் பரிசை வென்றார். அவருக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் உதகை மண்டலம் குன்னூர் கிளை, அனைத்து தொழிலாளர்கள் சார்பாக மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



■ நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட காட்டேரி பால்காரர் லைன் பகுதியில் அப்பகுதி மக்களின் 25 ஆண்டு கால கோரிக்கையான தடுப்புசுவுருடன் கூடிய நடைபாதை அமைக்கும் பணியினை மாவட்ட கழக துணை செயலாளர் தமிழ்செல்வன், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணை செயலாளரும் குன்னூர் நகர மன்ற துணை தலைவர் பா மு வாசிம் ராஜா அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் குமரேசன், மாவட்ட பிரதிநிதி எஸ்.மணிகண்டன் , மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மு.பத்மநாபன் , தலைமைக் கழக பேச்சாளர் மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் தலைவர் ஜாஹீர்உசேன் நகர இளைஞரணி அமைப்பாளர் சையது மன்சூர் கழக நிர்வாகிகள் சிவகுமார், சதீஷ், ராஜேந்திரன், ஆறுமுகம், உள்ளிட்ட ஊர் பொதுமக்களுடன் துவக்கிவைத்னர்.

## பாடியநல்லூர் ஸ்ரீ செல்வவிநாயகர் கோயில் திடலில் உலக மகளிர் தினவிழா சாதனை படைத்த பெண்களுக்கு விருது வழங்கல்

மாதவரம், மார்ச். 10-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சியில் உள்ள ஸ்ரீ செல்வவிநாயர் கோயில் திடலில் செங்குன்றம் காவல் சிறார் மன்றம் மற்றும் ஸ்கூல் ஆப் இந்தியன் சிலம்பம் பயிற்சி கூடத்தின் ஏற்பாட்டில் 2026ம் ஆண்டு மகளிர் தினத்தை முன்னிட்டு தன் துறை சார்ந்து சாதனை படைத்து வரும் பெண்களுக்கு போற்றுதற்குரிய பெண் என்கின்ற விருது வழங்கும் விழா சிலம்பம் ஆசான் பகவதிசந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது.நிகழ்ச்சியில் பெண்களுக்கு சிலம்பம் மற்றும் தற்காப்பு பயிற்சி முறைகள் கற்றுக் கொடுக்கப்பட்டது நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக மகளிர் காவல் துணை ஆய்வாளர்கள் புவனேஸ்வரி, பேபி, முன்னாள் பாடியநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜெயலட்சுமி நடராஜன், ஹன்டின் ஹன்ட் நிர்வாகி தேவேந்திரன், ஆப்பிள் கிரீச் பள்ளியின் நிறுவனர் ராஜேஸ்வரி, ஸ்மார்ட் ஜூனியர் பள்ளியின் நிறுவனர் தேவி, கல்லூரி பேராசிரியர் ராஜா, முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர் சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டு மாணவ மாணவிகளுக்கு சீருடைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வாழ்த்துரையாற்றினர். இதில் சிலம்பம் குழுவினர்கள் புஷ்பவள்ளி, வர்ஷினி, கவிப்பிரியா, மஞ்சு, சிவசக்தி, பிரதீபா, ஸ்ரீப்ரியா, வசந்த், ராஜி, மணிகண்டன் உள்ளிட்ட பெற்றோர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.





# 2026 சட்டமன்றத் தேர்தலில் பல்லாவரம் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கேட்டு எளிய குடும்பத்தை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் விருப்ப மனு

பல்லாவரம் மார்ச். 10- காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் பல்லாவரம் தொகுதியில் போட்டியிட திமுக கழக உறுப்பினர் தி.பு.தமிழ் செல்வம் விருப்பம் மனு தெரிவித்துள்ளார் இதற்கான சென்னை தேனாம்பேட்டில் உள்ள திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் உரிய முறைப்படி தனது விருப்பம் மனு அவர் அளித்தார் நீண்ட காலமாக பணியாற்றி வரும் ஆட்டோ ஓட்டுனராக இருந்த சட்டமன்றத் தேர்தலில் வாய்ப்பு கேட்டு எளிய குடும்பத்தை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் என்று மக்களிடையே நன்கு அறிமுகமானவர் என்று குறிப்பிடத்தக்கது வாய்ப்பு கிடைக்குமா பொது மக்களிடையே எதிர்பார்ப்பு?



# விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் உலக மகளிர் தினவிழா

மாதவரம், மார்ச். 10- மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். சுதர்சனம் ஆலோசனையின் பேரில், விளாங்காடு பாக்கம் திமுக சார்பில் முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர் வழக்கறிஞர் பெ.சரவணன் தலைமையில் 500க்கும் மேற்பட்ட ஏழைத்தாய்மார்களுக்கு புடவைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு முன்னாள் விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற தலைவரும், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளருமான பாரதி சரவணன் கலந்து கொண்டு அனைவருக்கும் மகளிர் தின நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு இனிப்புடன் கூடிய புடவை போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் வழக்கறிஞர் பரிமளச்செல்வம், தனுஷ்சரவணன், எழிலன், உள்ளிட்ட விளாங்காடுப்பாக்கம் ஊராட்சி திமுக நிர்வாகிகள், மகளிர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# இலங்கை கடற்பகுதியில் படகிலிருந்து ரூ.510 கோடி மதிப்புள்ள 102 கிலோ ஹெராயின் போதைப்பொருள் பறிமுதல்

இலங்கை, மார்ச்.10- இலங்கை கடற்படையினர் ரோந்து சென்றபோது சந்தேகத்திற்கு இடமாக இருந்த மீன்பிடி படகை சுற்றிவளைத்து சோதனை நடத்தினர். அப்போது படகிலிருந்து ரூ.510 கோடி மதிப்புள்ள 102 கிலோஹெராயின் போதைப்பொருள் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது. போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக 6 பேரை மீன்பிடி படகுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். ராமநாதபுரத்தில் ரூ.100கோடி போதைப் பொருள் சிக்கிய நிலையில் இலங்கை கடற் பகுதியிலும் போதைப்பொருள் கைப்பற்றியது.



# சிவகங்கை பாம்கோ தொமுச நிர்வாகிகள் அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்

## பொதுச் செயலாளர் நாகராஜன் தலைமை

சிவகங்கை மார்ச். 10- சிவகங்கை மாவட்டம் தமிழ் நாடு அரசு நியாய விலைக் கடை பணியாளர்களுக்கான ஊதிய உயர்வு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்திடும் வகையில். சிவகங்கை மாவட்ட பாம்கோ தொமுச நிர்வாகிகள் அனைவரும் தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்களை நேரில் சந்தித்து கைத்தறியாடை அணிந்து தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்...சிவகங்கை பாம்கோ தொமுச பொதுச்செயலாளர் நாகராஜன் தலைமையில் . சங்கத்தின் துணைத் தலைவர் சரவணன் . பொருளாளர் மலைச்சாமி .மாவட்ட கவுன்சில் துணைத் தலைவர் யோகநாதன் . நிர்வாக குழு உறுப்பினர்கள் பாலு, பாலமுருகன், பாவேந்திரன் கணேசமூர்த்தி ராஜேந்திரன் சண்முகராஜா பாலச்சந்திரன் அருள், மோகன்ராம் செந்தில்குமார் உள்ளிட்ட சங்க உறுப்பினர்கள் ஆகியோர் தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்களை நேரில் சந்தித்து கைத்தறியாடை அணிந்து தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்...

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு முடிச்சூர் ஊராட்சி திமுக சார்பில் நலத்திட்ட உதவிகள்



முடிச்சூர் மார்ச். 10- செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியத்துக்கு உட்பட்ட முடிச்சூர் ஊராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அவர்களின் 73வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு முடிச்சூர் ஊராட்சி திமுக சார்பில் ஊராட்சி மன்ற உறுப்பினர் க.மணிகண்டன்.அவர்கள் தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர்.ராஜா. அவர்கள் திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து,500க்கும் மேற்பட்ட ஏழை எளிய பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவுகளை வழங்கினார்.இந்நிகழ்வில் முடிச்சூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் விநாயகமூர்த்தி,ஒன்றிய கவுன்சிலர் ச.விசாலாட்சி, கிளை செயலாளர்கள் பி.எஸ்.ரமேஷ்,சுனில் மேத்யூ,குமார், வி.ஆர்.குமார் ஊராட்சி மன்ற உறுப்பினர். சத்தியா சந்திரன். இளைஞர் அணி நிர்வாகிகள். நூர்முகமது. விக்னேஷ் ரவி வர்மா கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரியில் பெண் தொழில்முனைவோர் கண்காட்சி




கிருஷ்ணகிரி, மார்ச். 10- கிருஷ்ணகிரியில் நடந்த பெண் தொழில்முனைவோர் கண்காட்சியில் 30க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்கள் பங்கேற்றனர்.

அக்கிசக்தி மற்றும் ரோட்டரி கிளப் இணைந்து, சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, "சக்தி 2026" பெண் தொழில் முனைவோர் கண்காட்சி மற்றும் விற்பனை மேளா, கிருஷ்ணகிரி ஹவுசிங் போர்டு பகுதியில் நேற்று நடந்தது. பெண்களின் பொருளாதார சுதந்திரத்தை வலியுறுத்தி நடத்தப்பட்ட இக்கண்காட்சியில் மொத்தம் 29 பிரத்யேக ஸ்டால்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதில், கிருஷ்ணகிரி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 30 க்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்தியிருந்தனர்.

இக்கண்காட்சியில் பெண்களால் கைப்படத் தயாரிக்கப்பட்ட பாரம்பரிய கைத்தறி ஆடைகள் மற்றும் நவீன வடிவமைப்புகள், சுய உதவிக்குழுக்களின் இயற்கை மற்றும் ஆரோக்கியமான உணவுப் பொருட்கள், கலைநயமிக்க செயற்கை ஆபரணங்கள் மற்றும் கைவினைப் பொருட்கள், வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட விவசாயப் பொருட்கள் ஆகியவை மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. கண்காட்சிக்கு வந்திருந்த ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் பொருட்களைக் கண்டு ரசித்ததுடன், தங்களுக்கு தேவையானவற்றை வாங்கி சென்றனர்.

இந்த விழாவிற்கு சிறப்பு விருந்தினராக, நாளந்தா பள்ளி கல்வி நிறுவன தாளாளர் சாமுண்டீஸ்வரி கொங்கரசன் பங்கேற்று, கண்காட்சியை துவக்கி வைத்தார். அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் கீதா, பொறியாளர் சர்மிளா முருகன், ரோட்டரி தலைவர் உஷா, குளோபல் பேமிலி அன்பு ஆகியோர் தொழில் முனைவோருக்கு சான்றிதழ் வழங்கி கவுரவித்தனர்.

இதில், புதிய தொழில் தொடங்க விருப்பம் உள்ள பெண்களுக்கு அனுபவம் வாய்ந்த தொழில் முனைவோர்கள் மூலம் ஆலோசனைகளும், சந்தைப்படுத்துதல் குறித்த வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன. அக்ரிசக்தி செல்வமுரளி, ரோட்டரி செயலாளர் அன்புசெல்வன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# மாசி மாத பஞ்சமியை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் காட்சியளித்ததிருவையாறு சத்குருதியாகராஜர்

தஞ்சாவூர் மார்ச். 10- திருவையாறு சத்குரு ஸ்ரீதியாகராஜர் ஆஸ்ரமத்தில் மாசி மாத பஞ்சமியை முன்னிட்டு தியாகராஜ சுவாமிக்கு பரம்பரை பூஜா ஸ்தானிகர் தியாகராஜ சர்மாசிறப்பு அபிஷேகம், அலங்காரமும் தீபாராதனைகளை செய்தார் . கர்நாடக இசைக் கலைஞர்கள் பஞ்சரத்தின கீர்த்தனைகள் மற்றும் சம்பிரதாய கீர்த்தனைகள் பாடிதியாகராஜருக்கு இசையஞ்சலி செலுத்தினர். அன்னதானம் நடந்தது.இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# திருமுல்லைவாயல் இரயில் நிலையம் அருகே 25 கிலோ கஞ்சா கடத்தல் இருவர் கைது



மாதவரம், மார்ச். 10- ஆவடி காவல் ஆணையரகத்திற்குட்பட்ட பகுதிகளில் அரசால் தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் ஜெகநாதன் தலைமையிலான போலீசார் திருமுல்லைவாயல் இரயில் நிலையம் அருகில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது அங்கு சுற்றி திரிந்த சந்தேக நபர்களான பட்டாபிராம் பகுதியைச் சேர்ந்தவர்களான விக்னேஷ் @ விக்கி (வ/20) த/பெ வெங்கடேசன் மற்றும் சிவா (வ/19) த/பெ ரவி ஆகிய இருவரையும் விசாரணை செய்து சந்தேகத்தின் பேரில் மேற்படி இருவரையும் சோதனை செய்ததில் அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 25 கிலோ கஞ்சா இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து கஞ்சாவை கைப்பற்றி குற்றவாளிகளை கைது செய்யப்பட்டு மேலும் விசாரணை செய்ததில் இருவரும் ஒடிசா மாநிலத்தில் இருந்து கஞ்சாவை விற்பனைக்காக வாங்கி வந்தது தெரியவந்தது. இதனையடுத்து இருவர் மீது அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டனர்.



# டெல்லியில் இருந்து மான்செஸ்டர் சென்று கொண்டிருந்த இண்டிகோ விமானம் மீண்டும் டெல்லிக்கே திரும்பியது

டெல்லி, மார்ச்.10- டெல்லியில் இருந்து மான்செஸ்டர் சென்று கொண்டிருந்த இண்டிகோ விமானம் மீண்டும் டெல்லிக்கே திரும்பியது. வளைகுடாவில் போர்சூழல் நிலவும் பகுதியை தவிர்த்து வேறு வான்வழி பாதையில் விமானம் பறந்தபோதிலும் திரும்ப ஆணையிட்டுள்ளது. சுமார் 14 மணி நேரம் விமானம் பயணித்தபோதிலும் புறப்பட்ட இடத்துக்கே மீண்டும் திரும்பியது.

# கிருஷ்ணகிரியில்மிலாடிநபி விழாக்குழு சார்பில்நோன்பு திறக்கும் நிகழ்ச்சிதிமுக மாவட்ட செயலாளர் மதியழகன் எம்எல்ஏ., பங்கேற்பு





கிருஷ்ணகிரி, மார்ச். 10- கிருஷ்ணகிரியில் மிலாடிநபி விழாக்குழு சார்பில் நடந்த ரம்ஜான் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் திமுக மாவட்ட செயலாளர் மதியழகன் எம்எல்ஏ., பங்கேற்றார்.

புனித ரம்ஜான் மாதத்தை முன்னிட்டு, மிலாடிநபி விழாக்குழு சார்பில், கிருஷ்ணகிரி சந்தை பேட்டை ரசூல் மசூதி வளாகத்தில், நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடந்தது. தலைவர் அஸ்லம் ரஹ்மான்ஷெரிப் தலைமை வகித்தார். மிலாடிநபி விழாக்குழு செயலாளர் கராமத் வரவேற்றார். இதில், கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் மதியழகன் எம்எல்ஏ., சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, நோன்பை துவக்கி வைத்து பேசினார். அவர் பேசுகையில், திமுக., அரசு எப்போதும், எந்த சூழ்நிலையிலும் இஸ்லாமியர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டு வருகிறது. இஸ்லாமியர்களின் பாதுகாவலனாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்பட்டு வருகிறார். உங்களுக்காக நாங்கள் எப்போதும் நல்லாட்சி வழங்க தயாராக இருக்கிறோம். இந்த இப்தார் நோன்பு திறப்பின் மூலம் எல்லோரும், எல்லா வளமும் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துக்கள் என்றார்.

நிகழ்ச்சியில், திமுக நகர பொறுப்பாளர் வேலுமணி, விழாக்குழு துணைத் தலைவர் ஜாமீர், பொருளாளர் முகம்மத்யஹியா, நகர்மன்ற உறுப்பினர்கள் மத்தின், நதிம், விழாக்குழு உறுப்பினர்கள் இக்பால், சுஹேல், முனவர்கான், ஷமியுல்லா, ரியாஸ், வாஜித், இர்பான் உள்பட 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நகர்மன்ற உறுப்பினர் பிர்தோஸ்கான் நன்றி கூறினார்.

மாலை தந்தி

செவ்வாய்கிழமை 10.03.2026



# சேம்பார் நடுநிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டம்

காளையார் கோவில் மார்ச். 10-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டமும் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது. பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் வரவேற்றார். பள்ளி தலைமை ஆசிரியர்(பொறுப்பு) சுரேஷ் தலைமை ஏற்றார். தஞ்சை பெரிய கோயில், சிவகங்கை பூங்கா, வேளாங்கண்ணி, கல்லணை மற்றும் ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களுக்கு கல்வி சுற்றுலா சென்று குழந்தைகளை பாதுகாப்பாக அழைத்து வர சிறப்பாக ஏற்பாடு செய்த தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. தலைமை ஆசிரியர் சுரேஷ், வரும் கல்வி ஆண்டில் ஆறு, ஏழு மற்றும் எட்டாம் வகுப்புகளுக்கு திறன் அடிப்படையில் தேர்வு நடைபெறும் என்றும் ஒன்று முதல் ஐந்து வகுப்பு மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் திட்ட முறையில் தேர்வுகள் நடைபெறும் என்று விளக்கி கூறினார். ஆண்டு விழா எவ்வாறு சிறப்பாக நடத்துவது பற்றி விவாதிக்கப்பட்டது. மாணவர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வாசிப்பு திறன் மேம்படுத்துவது பற்றி விவாதிக்கப்பட்டது. 2026 2027 கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை எல்கேஜி முதல் எட்டாம் வகுப்பு வரை மார்ச் 1ஆம் தேதி முதல் நடைபெறுகிறது என்று விவரம் பெற்றோர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இடைநிற்றல் இல்லாமல் அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்க பள்ளி மேலாண்மை குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இடைநிலை ஆசிரியர் முருகன் நன்றியுரை கூறினார். பள்ளி மேலாண்மை குழு தலைவி டேவிட் அருள் ஷாலினி துணைத் தலைவி ஜெயா பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவி ஆரோக்கிய ரோஸியா மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.ஆசிரியர்கள் காளீஸ்வரன் முத்துக்குமார் முருகன் சகாய செல்வி பாரதி மலர் மற்றும் தனபாக்கியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.






# கண் நீரழுத்த நோயை முன்கூட்டியே கண்டறிவோம்”- மதுரையில் விழிப்புணர்வு பேரணி

மதுரை, மார்ச். 10-

“கண் நீர் அழுத்த நோய் வாரம்” முன்னிட்டு மதுரையில் உள்ள ஸ்ரீ ராமச்சந்திர கண் மருத்துவமனை சார்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

மருத்துவமனை நிறுவனர் எஸ். சீனிவாசன் தலைமை வகித்தார். பேரணியை பட்டிமன்ற பேச்சாளர் பேராசிரியர் சாலமன் பாப்பையா, பேச்சாளர் எஸ். ராஜா, “மனிதத்தேனீ” ஆர். சொக்கலிங்கம், மதுரை மருத்துவக் கல்லூரி டீன் எல். அருள்சுந்தரேஷ்குமார், மருத்துவ மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் ஆர். செல்வராஜ் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

சிறப்பு விருந்தினராக அண்ணாதுரை, அண்ணா கல்லூரி சேர்மன் கலந்து கொண்டார். பேரணியில் நகரின் முக்கிய பிரமுகர்கள் மற்றும் 350க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு கண் நீரழுத்த நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் கண் நீரழுத்த நோய் பற்றிய அவசியம் குறித்து எஸ். சீனிவாசன் விளக்கம் அளித்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மருத்துவமனை மேலாளர்கள் பி. பாபு, ஆர். ஜெயசெந்தில், கே. சாய் கணபதி, ஜே. இராஜதுரை ஆகியோர் செய்திருந்தனர்.



■ விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், ஆவியூர் கிராமத்தை சேர்ந்த முத்துக்குமரன் என்பவரின் மகள் துர்காதேவி கடந்த (232026) அன்று பன்னிரெண்டாம் வகுப்பு பொது தேர்வு எழுத மதுரை மையத்தில் உறவினரின் வாகனத்தில் சென்றபோது விபத்து ஏற்பட்டு உயிரிழந்தமைக்காக மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாட்சியர் அறிக்கையின் பேரில் மதுரை மாவட்ட ஆட்சியரின் அறிவுரையின்படி உயிரிழந்த துர்காதேவியின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய்.3 லட்சத்திற்கான காசோலையை மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் வழங்கினார்.

# ரூ13.10 கோடி மதிப்பீட்டில் ICM மதுரைக்கு புதிய வளாகம்: பூமி பூஜை, அடிக்கல் நாட்டும் விழா

மதுரை ,மார்ச். 10-

நியூ டெல்லியில் உள்ள இந்திய அரசின் கூட்டுறவு அமைச்சகத்தின் தேசிய கூட்டுறவு பயிற்சி கவுன்சில் (NCCT) நிறுவனத்தின் கீழ் செயல் பட்டு வரும் மதுரை கூட்டுறவு மேலாண்மை நிறுவனம் (ICM Madurai) 1983 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.இந்தியாவில் உள்ள 19 கூட்டுறவு மேலாண்மை நிறுவனங்களில் தமிழ்நாட்டில் இரண்டாவது கூட்டுறவு மேலாண்மை நிறுவனம் என்ற தனித்துவத்தையும் பெற்றுள்ள இந்நிறுவனம் கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகள் மூலம் கூட்டுறவு துறையை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றி வருகிறது.இந்நிறுவனம் கூட்டுறவில் பணியாற்றும்



அதிகாரிகளுக்காக குறுகிய கால பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது.மேலும் இந்நிறுவனத்தின் முக்கியப் பயிற்சி திட்டமாக Higher Diploma in Co-operative Management (HDCM) என்ற ஒன்பது மாத காலப்படிப்பு வழங்கப்படுகிறது. தமிழ்நாடு பொது சேவை ஆணையம் (TNPSC) மூலம் தேர்வு செய்யப்பட்ட Group-I மற்றும் Group-II அதிகாரிகளுக்குத் தவறாமல் பெற வேண்டிய பயிற்சியும் இங்கு அளிக்கப்படுகிறது.மேலும் கடன் மற்றும் வங்கி துறை,மார்க்கெட்டிங், செயற்கை நுண்ணறிவு,தகவல் தொழில்நுட்பம்,கணினி பயன்பாடு, மேலாண்மை தகவல் அமைப்பு மற்றும் நுகர்வோர் கூட்டுறவுகள், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் (TNCU) உள்ளிட்ட பல்வேறு கூட்டுறவு துறைகளுக்கான பயிற்சி திட்டங்களும் நடத்தப்படுகின்றன.

கூடுதலாக கூட்டுறவு கணக்காய்வு, ICDS, சமூக நலத்துறை, பால் வளர்ச்சி துறை, ஆவின்,கால்நடை வளர்ப்பு, கூட்டுறவு துறை,மீன்வளத்தொழில் துறை, சர்க்கரைத் துறை,கைத்தறி நெசவு, வீட்டு வசதி,காதி போன்ற பல அரசு துறைகளின் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கும் இந்நிறுவனம் பயிற்சி வழங்கி வருகிறது.இந்நிலையில் மதுரை விமான நிலைய விரிவாக்கம் காரணமாக அருகிலுள்ள பாப்பனோடை கிராமத்தில் புதிய கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை மற்றும் அடிக்கல் நாட்டு விழா NCCT செயலாளர் திருமதி மினு ஷுக்லா பதக், IRS தலைமையில் நடைபெற்றது.புதிய வளாக கட்டுமானப் பணிகளுக்கு ₹13.10 கோடி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ₹8.70 கோடி கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.2026 டிசம்பர் மாதத்திற்குள் பணிகள் நிறைவடைந்து கட்டடத் திறப்பு விழா நடைபெறும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.இந்நிகழ்வில் ICM மதுரை இயக்குநர் சத்தியகுமார் சாம் மைக்கேல், மிசிவி மதுரை பணியாளர்கள்,CPWD அதிகாரிகள், தலைமை பொறியாளர்கள் சாய் கிருஷ்ணன், பொனுகோட்டி, நிர்வாகப் பொறியாளர் அஜய் சர்மா, இளநிலை பொறியாளர் நவநீதன், உதவி பொறியாளர் பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



■ தேனி மாவட்டம் கம்பம் நகராட்சி, நகர் முழுவதும் குப்பை கழிவுகளை அகற்றுவதர்க்கு தனியாரிடம் ஒப்பந்தம் செய்துள்ளது.ஒப்பந்த ஊழியர்கள் ஹோட்டல் மற்றும் காய்கறி கழிவுகளை மட்டும் அகற்றிவிட்டு பொதுமக்கள் போடும் கழிவுகளை அங்கேயே விட்டு செல்கின்றனர்.குறிப்பாக கம்பம் 13வது வார்டு செல்லாண்டியம்மன் கோவில் அருகில் மொத்த காய்கறி கடைகள் அதிகம் உள்ளது.இவர்கள் போடும் காய்கறி கழிவுகளை கமிஷன் வாங்கி கொண்டு அகற்றிவிட்டு பொதுமக்கள் குப்பைகளை அகற்றாமல் ஒப்பந்தபணியாளர்கள் விட்டு செல்கின்றனர்.இதனால் அருகில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு நோய்தொற்றும் அபாயம் உள்ளது. இதை உடனே கம்பம் நகராசி நிர்வாகம் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் மற்றும் சமூகஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## வருவாய் கோட்டாட்சியர் சிவகங்கை

**ந. க. பி 1/7064/2025**

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், ஒக்கூர் கிராமம் என்ற முகவரியில் வசித்து வரும் திரு. மு. மகாலிங்கம் (த /பெ. முத்திருளாண்டி ) என்பவரின் தந்தை முத்திருளாண்டி (த / பெ.ராமபண்டாரம் ) என்பவர் கடந்த 04.01.2001 அன்று சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் ஒக்கூர் கிராமத்தில் இறந்து விட்டார். அன்றைய சூழ்நிலையில் மேற்படி இறப்பு பதிவு செய்யப்பட்டவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக் கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம்.அவ்வாறு ஆட்சேபனை ஏதும் வரப் பெறவில்லையெனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறு இறப்பினை பதிவு செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மனுதாரர்

திரு. மு. மகாலிங்கம்
த . பெ. முத்திருளாண்டி
கதவு எண்2/205, புதுவலவு,
ஒக்கூர்

எதிர்மனு

1. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய்கோட்டாட்சியர் அலுவலகம்
சிவகங்கை

## வருவாய் கோட்டாட்சியர் சிவகங்கை

**ந. க. பி 1/395/2026**

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், புலிக் கண்மாய் கிராமம் என்ற முகவரியில் வசித்து வரும் திருமதி ஜூலியானள் (த /பெ. ஆரோக்கியம் ) என்பவரின் தந்தை ஆரோக்கியம் என்பவர் கடந்த 02.06.1975 அன்று சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் வட்டம் புலிக்கண்மாய் கிராமத்தில் இறந்து விட்டார். அன்றைய சூழ்நிலையில் மேற்படி இறப்பு பதிவு செய்யப்பட்டவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக் கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம்.அவ்வாறு ஆட்சேபனை ஏதும் வரப் பெறவில்லையெனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறு இறப்பினை பதிவு செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது..

மனுதாரர்

திருமதி. ஜூலியானா
த/ பெ ஆரோக்கியம்
புலிக் கண்மாய் கிராமம்
காளையர்கள் வட்டம்
சிவகங்கை மாவட்டம்

எதிர்மனு

1. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய்கோட்டாட்சியர் அலுவலகம்
சிவகங்கை

# அ.தி.மு.க. பொதுச்செயலாளரை பா.ஜ.க. மாற்றும் என கூறியதாக:மு.க.ஸ்டாலினுக்கு கே.பி.முனுசாமி கண்டனம்

கிருஷ்ணகிரி, மார்ச். 10-

தேர்தலுக்கு பிறகு அ.தி.மு.க. பொதுச்செயலாளரை பா.ஜ.க. மாற்றிவிடும் என கூறியதாக முதலமைச்சர் மு க ஸ்டாலின் மீது, அ.தி.மு.க. துணை பொதுச்செயலாளர் ரி. றி. முனுசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரியில் நேற்று நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

பீகார் மாநிலத்தில் முதல்மந்திரி பதவியை ராஜினாமா செய்து மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட சம்பவத்தை எடுத்துக்காட்டி, அதேபோல் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும் நடக்கும் என மு க ஸ்டாலின் கூறியுள்ளார். இதைப் பற்றி அவர் கவலைப்பட வேண்டியதில்லை.




மேலும், தேர்தலுக்கு பிறகு அ.தி.மு.க. பொதுச்செயலாளரை பா.ஜ.க. மாற்றிவிடும் என அவர் கூறியுள்ளார். மு க ஸ்டாலின் எப்போது இந்த ஒற்றர் வேலையை ஆரம்பித்தார் என்பது தெரியவில்லை. கருணாநிதி காலத்தில் கூட எம்ஜிஆர் உருவாக்கிய அ.தி.மு.க. இயக்கத்தை அழிக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவை வெற்றி பெறவில்லை. இப்போது மு க ஸ்டாலின் க்கு தேர்தல் பயம் ஏற்பட்டுள்ளது. இந்த தேர்தலில் எடப்பாடி பழனிசாமி வெற்றி பெற்று முதல் அமைச்சராகிவிடுவார் என்ற பயத்தில் மக்கள் மனதை மாற்ற பல கருத்துகளை கூறி வருகிறார். ஆனால் அவரது முயற்சி தோல்வியடையும்.

ளி. பன்னீர்செல்வம் இந்த இயக்கத்தில் பின்னர் இணைந்தவர். அவர் பதவியின் சுகத்தை அனுபவித்தவர் மட்டுமே. இயக்க வளர்ச்சிக்காக போராடவோ, சிறை செல்லவோ இல்லை. வாய்ப்பு கிடைத்ததால் முதல்அமைச்சராகி அந்த பதவியை அனுபவித்தார். பின்னர் சென்றுவிட்டார். எனவே அ.தி.மு.க.வின் உண்மையான வரலாறு அவருக்கு தெரியாது.

இவ்வாறு அவர் கூறினார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் அசோக்குமார் எம் எல் ஏ உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.





# பாடியநல்லூர் மதுரைவீரன் ஸ்ரீ பதினெட்டாம்படி கருப்பண்ணசாமிஸ்ரீ பாதபால சுந்தரி மரியம்மன் ஆலயத்தில் தீமிதி திருவிழா

மாதவரம், மார்ச்.10-

திருவள்ளுர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி பீ.டி.மூர்த்தி நகரில் அமைந்துள்ள அருள்மிகு மதுரைவீரன் ஸ்ரீ பதினெட்டாம்படி கருப்பண்ணசாமி பாதபால சுந்தரி மாரியம்மன் ஆலயத்தில் 48ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய ஸ்தாபகர் எம்.ராஜேந்திரன் வீரா, ஆலய தலைவர் பி.கார்மேகம், ஆலய செயலாளர் எஸ்.முத்துக்கண்ணன், பொருளாளர் கொளத்தூர் கே.மகேஷ் ஆலய அன்னதானக்குழு தலைவர் கே.ஆர்.வெங்கடேசன், செயலாளர் ரவிச்சந்திரன், இணை செயலாளர் சரண்ராஜ், பொருலாளர் ராஜேஷ் ஆலய கௌரவ ஆலோசகர்கள் மனோகரன், ராஜேந்திரன், தஞ்சை கே.முருகேசன், கண்ணன்,காளியப்பன், ஆலய அன்னதானகுழு மகளிர் குழுவின் ஒருங்கிணைப்பாளர் நிர்மலா மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் காப்பு கட்டுதல், அக்னி கப்பறை எடுத்தல் மற்றும் பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் சுமார் 300க்கும் மேற்பட்ட காப்பு கட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இரங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இதனைத்தொடர்ந்து உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதான வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது. இத்திருவிழாவிற்கு ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு நெய்தீபம் ஏற்றிவைத்து அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.மேலும்

இத்திருவிழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161